OS: 168/2019

Date: 12.11.2025

பெயர் : வெங்கட்ராமன் **(வா.சா.1)** **ஆஜர்**, **சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

1. நான் என்ன பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு 40, 60 செண்ட் நிலத்தையும் எனது அண்ணன், தம்பிகள் பிரித்து கொடுக்கவில்லை என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எத்தனை செட்யூல்களாக பிரித்து காண்பித்துள்ளேன் என்றால் 4 பிரிவாக காட்டியுள்ளேன். A, B, C, D என்று காட்டியிருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்தபோது எனது தாயார் உயிருடன் இருந்தார்.

2. என் தாயார் உயிருடன் இருந்தபோது வழக்கு சொத்தில் எத்தனை பங்கு கேட்டிருந்தேன் என்றால் அனைவருக்கும் (அக்கா, தங்கை உட்பட) ஒரே மாதிரியாக பிரித்து தரச்சொல்லி கேட்டிருந்தேன். மொத்தம் எத்தனை பாகமாக பிரித்து அதில் எனக்கு எத்தனை பாகமாக பிரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன் என்றால் 5 பேருக்கும் சமமாக பிரித்து தரச்சொல்லி கேட்டிருக்கிறேன்.

3. என் தாயார் இறந்த பிறகு பிராதை திருத்தம் செய்து அவருடைய பங்கை பொறுத்து மாற்றம் செய்ய வழக்கில் பரிகாரம் கேட்டிருக்கிறேனா என்றால் இல்லை. உண்மையாகவே நான் பாகம் கோர நினைத்திருந்தால் என் தாயாரின் பாகத்தை எங்களுக்கு பிரித்து தரச்சொல்லி கேட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு கேட்காததலிருந்தே 5ம் பிரதிவாதியின் பாகத்தை ஏமாற்றுவதற்காக இவ்வாறு வழக்காடி வருகிறேன் என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்துக்களை A, B, C, D செட்யூல்களாக காட்டியிருக்கும் நிலையில் A செட்டியூல் சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.57/6 ஆகும். அது 41 செண்ட் ஆகும். சர்வே எண்.57/6 என்பதும், அதன் விஸ்தீரணம் 41 செண்ட் என்று சொல்வதும் தவறானது என்றால் சரியல்ல. A செட்டியூல் சொத்து எனது தகப்பனாரின் சொத்து என்றால் என் அப்பா கிரையம் வாங்கி என் அம்மா பெயருக்கு எழுதி வைத்த சொத்தாகும்.

5. A செட்டியூல் சொத்து பாகக்கறார் மூலமாக என் தகப்பனாருக்கு வந்தடைந்தது என்று 5ம் பிரதிவாதி சொல்கிறார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரையம் வாங்கி என் அம்மா பெயருக்கு எழுதி வைத்தாக சொல்லும் நிலையில் அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

6. B செட்டியூல் சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. இடம் தான் தெரியும். B செட்டியூல் சொத்தின் நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் எனக்கு சொல்ல தெரியவில்லை. B செட்டியூல் சொத்துதான் என் தாயார் கிரையம் வாங்கிய சொத்து என்றால் ஆமாம். என் தகப்பனார்தான் என் தாயார் பெயரில் என் சித்தப்பாவிடம் இருந்து கிரையம் வாங்கி வைத்தார். என் அப்பா தான் வேலைக்கு போய் வாங்கினார்.

7. B செட்டியூல் சொத்து என் சித்தப்பாவிற்கு பாகக்கறார் மூலம் வந்தது என்றால் ஆமாம். அதை எங்களுக்கு விற்றுவிட்டார். அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் சர்வே எண்.57/6A

என்றாலும், அதற்கு என் தாயார் பெயரில் தான் பட்டா இருக்கிறது என்றாலும் ஆமாம். என் அப்பாதான் என் அம்மா பெயருக்கு எழுதி வைத்தார்.

8. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள C செட்டியூல் சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. C செட்டியூல் சொத்திலும் பங்கு கேட்டிருக்கிறேன் என்றால் ஆமாம்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.